# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்  வணிக மாத இதழ்


Volume: 14 | Issue : 03 | JUNE 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



உள்நாடு மற்றும் வெளிநாடு

விமான டிக்கெட்ஸ்

குறைந்த விலையில் வாங்க



IndiGo | AIR INDIA | spicejet | Emirates | Lufthansa



VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

காமராஜர் சாலை, மதுரை



91599 18447




வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்து பொருட்களின்

ஏற்பாடு SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

# வர்த்தக கண்காட்சி மற்றும் விற்பனை

## SCC Trade Fair 2025

II Edition



**8, 9 & 10 ஆகஸ்ட் 2025**

காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை

அனுமதி இலவசம்

**ராஜ்பாலா ஹால் A/C**

காமராஜர் சாலை, மதுரை -9




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343





GSTIN: 33ALZPD4776G1ZO

மல்லிகை
The Mart

GROCERY / TOYS / STATIONERY / GIFTS

Online Delivery : 9345910000

No. 198-A, South Masi Street, Madurai - 625001.

KARPAGAM GROUP OF COMPANIES
SINCE 1985

Karpagam

Auto Group of Companies

Dealers in Automobile Spare Parts

53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu
Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ

## நமஸ்காரா...

K.K. தினேஷ், தலைவர்

இந்த மாதம் நடைபெற்ற நம் சேம்பர்-ன் தொழில் வர்த்தக கூட்டத்தில் பேசிய M/s. Blaack Forest திரு. B. ஆனந்த் அவர்கள், புதிய தொழில் துவங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு தமது உணவு தொழில் துறைசார்ந்த தொழில் வாய்ப்பை அளிப்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்தது அருமை. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்பவர்களுக்கு வெற்றி நிச்சயம்.

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இரண்டாவது முறையாக, 2023க்குப் பிறகு, இந்த ஆண்டு **SCC Trade Fair** 2025 தொழில் வர்த்தக கண்காட்சியை வரும் ஆகஸ்ட் மாதம் 8,9 & 10 ஆகிய தேதிகளில் மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள ராஜ்பாலா அரங்கில் நடத்த இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வர்த்தக கண்காட்சி, சேம்பர் துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்களின் தலைமையில், செயற்குழு உறுப்பினர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்களின் குழு ஒருங்கிணைப்பில் நடைபெற இருக்கிறது.

நம் சமூக தொழில் முனைவோர்கள் தங்கள் தயாரிப்புகளை, சேவைகளை சந்தைப்படுத்த இந்த வர்த்தக கண்காட்சி ஒரு சிறந்த தளமாக இருக்கும். ஆகவே, இந்த வாய்ப்பை நம் வர்த்தகர்கள் பயன்படுத்திக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பழமையான பொறியியல் அமைப்பு, கடந்த மாதம் சிறந்த முன்னோடி பொறியாளர் என்கிற விருதை நமது சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்களுக்கு வழங்கி கௌரவித்துள்ளது, நம் சமூகத்திற்கு பெருமை. அதோடு, ஜெனீவாவில் உள்ள ILO எனப்படும் உலக தொழிலாளர்கள் அமைப்பு (ILO - International Labour Organisation) நடத்திய தொழிலாளர்களுக்கான மாபெரும் கருத்தரங்கில் இந்திய நாட்டின் பிரதிநிதியாக கலந்து கொண்டு பேசியுள்ளார். இந்த அரிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்ததற்கு நம் சமூகத்திற்கும், நமது ஸௌராஷ்ட்ர சேம்பருக்கும் பெருமை என்றே கருத வேண்டும்.

பல்வேறு தொழில்துறைகளில், கலைத்துறையும் ஒன்று. இந்த கலைத்துறையில் சமீபத்தில், தமிழ் சினிமா போன்ற ஒளி/ஒலி அமைப்புடன் முதல் முயற்சியாக ஸௌராஷ்ட்ர மொழி திரைப்படத்தை நம் சமூக இளம் அறிமுக இயக்குநர் திரு. பிரீதி குமார் தமது ஐங்கோ்போ திரைப்படம் மூலம் அசத்தியுள்ளார். இந்த சிறு வயதில், பெரும் முயற்சியுடன் களமிறங்கியுள்ள அவரது அசாத்திய செயலுக்குப் பாராட்டுக்கள். தொடர்ந்து இதுபோன்ற புதிய முயற்சிகளை மேற்கொண்டு சாதனை படைத்து மென்மேலும் வளர ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது.

நன்றி


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS

## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |

| Advisors | | |
|---|---|---|
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**11.05.2025** – **SCC Trade Fair** 2025 தொழில் வர்த்தக கண்காட்சி நடத்துவதற்கான நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் சேம்பரில் நடைபெற்றது. இதில், தேதி மற்றும இடம், அரங்க அமைப்பு, பட்ஜெட் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

**18.05.2025** – சேம்பர் உறுப்பினரும், தொழிலாளர் ஆலோசகருமான திரு. எல்.வி. ஜோதிபிரகாஷ் மற்றும் சரவணா சர்ஜிகல் திரு. ஜனார்த்தனன் ஆகியோரின் இல்ல விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

**20.05.2025** – சேம்பர் போஷக உறுப்பினர் மும்பை திரு. எல்.ஜி. பத்மநாபன் அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

**23.05.2025** – தி இன்ஸ்டிட்யூட் ஆப் இன்ஜினியர்ஸ் அமைப்பின் சார்பாக சிறந்த முன்னோடி பொறியாளர் என்கிற விருது வழங்கும் நிகழ்ச்சியில், சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த விருதை பெற்ற, முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்களை சேம்பர் குழுவினர் வாழ்த்து தெரிவித்தனர்.

**05.06.2025** – சௌராஷ்ட்ர சேம்பர்–ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம் Entrepreneurship is a Cake Walk என்கிற தலைப்பில் நடைபெற்றது. M/s. Blaack Forest திரு. B. ஆனந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மிகச் சிறப்பாகப் பேசினார்.

சேம்பர் நிகழ்ச்சியின்போது, **SCC Trade Fair** 2025 பிரவுச்சர் சேம்பர் உடனடி முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இதனை M/s. Blaack Forest திரு. B. ஆனந்த் அவர்கள் பெற்றுக்கொண்டார். அன்றைய தினம், CBSE பத்தாம் வகுப்பு தேர்வு முடிவில், மதுரை மாவட்ட அளவில் மூன்றாம் இடம் பெற்ற நம் சமூக மாணவர் K.G. தர்ஷன் குமரை சௌ. சேம்பர் கௌரவம் செய்து பாராட்டியது.

**06.06.2025** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர், சன் ஏஜென்சிஸ் திரு. J.V. சுரேந்திரகுமார் அவர்களின் புதுமனை புகுவிழாற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

நமது சேம்பர் **SCC Trade Fair** 2025 தொழில் வர்த்தக கண்காட்சி வரும் ஆகஸ்ட் மாதம் நடத்த இருக்கிறது. அதற்கான ஸ்டால் அமைப்பு மற்றும் கட்டண விபரங்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்டால் அமைக்க விரும்புவோர். குழு ஒருங்கிணைப்பாளர் எண்ணிற்கு தொடர்புகொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

சென்ற மே மாத லாப் ஸமாச்சார் இதழ், வேல் மருத்துவமனையின், சிறப்பு மூட்டு மருத்துவர் திரு. கே.என். சுப்பிரமணியன் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. அவர் நமது இதழுக்குத் அளிக்கும் ஆதரவும், மதிப்பையும் நினைத்து மிகவும் மகிழ்கிறோம்.

நமது லாப் ஸமாச்சார் இதழ் அங்கத்தினர்கள் விரும்பும்படி, அவர்களுக்கு தேவையான தகவல்களுடன் தொடர்ந்து வெளிவருகிறது என்று நம்புகிறேன்.

தொழில் குறித்த தகவல்களை மட்டுமே இடம் பெறச் செய்யலாமே என்று சிலர் என்னிடம் கருத்து தெரிவித்திருந்தனர். அவர்களின் கருத்தை வரவேற்கிறேன். பெரும்பான்மையான வாசிப்பாளர்கள் விரும்புவதின் அடிப்படையில், தொழில் குறித்த தகவலோடு சில பொதுத் தகவல்களும் இருந்தால் வாசிப்பவர்களுக்கு ஆர்வம் கூடும் என்கிற நோக்கில் தொழில் தகவலோடு, இதர செய்திகளையும் வெளியிடுகிறோம் என்பதை தெரிவித்தக்கொள்கிறேன்.

### திருக்குறள்

**நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு.**

**பொருள்:** தன்னைவிட அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள் கூடியுள்ள சபையில் அவர்கள் விரும்புவதற்கு முன் பேச முற்படாமல் இருக்கிற அடக்கம் நல்ல குணங்களிலெல்லாம் நல்ல குணம்.

அதிகாரம் 72 | அவை அறிதல் (சபை அறிந்து பேசுவது) | அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544


Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear
ANAND
Viking
Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE
JOCKEY INNER WEAR
Poomex
MANGAI NIGHTIES
RASATHE DARLING NIGHTIES
YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

# GUEST HOUSE

AVAILABLE ON RENT

@ COURTALLAM

## BeKae Props. P Ltd

No.162, Courtallanather Main Road, Courtallam.
(Opp to Sri Parasakathi College for Women)

DAILY & WEEKLY BASIS | SINGLE / DOUBLE Rooms with Hall

Contact: S.Kumar 98849 19918








# Entrepreneurship is a Cake Walk
## Enter & Experiance




ஜூன் மாத தொழில் வர்த்தக நிகழ்ச்சி, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் சிறப்பு விருந்தினராக M/s. Blaack Forest திரு. B. ஆனந்த் அவர்கள் பங்கேற்றார்.

இளைய தலைமுறையினர் தொழிலில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. B. ஆனந்த் அவர்களை சேம்பர் போஷக மற்றும் ஆயுட்கால உறுப்பினர் திரு. B.V. ரமேஷ் பாபு அவர்கள் கூட்டத்தில் மிகச் சிறப்பாக அறிமுகம் செய்தார்.

முன்னதாக, ஜுன் மாதம் பிறந்தநாளை கொண்டாடும் சேம்பர் குழுவினர் கௌரவிக்கப்பட்டனர்.

CBSE பத்தாம் வகுப்பு தேர்வ முடிவில், மாவட்ட அளவில் மூன்றாம் இடம் பிடித்த மாணவர் கே.ஜி. தர்ஷன் குமாரை சேம்பர் கௌரவித்தது.

பிறகு, SCC Trade Fair 2025 பிரவுச்சர்–ஐ சேம்பர் உடனடி முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் வெளியீடு செய்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய திரு. B. ஆனந்த் அவர்கள், தொழிலில் ஈடுபவதற்கு முன்பான தமது ஆரம்ப கால அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

சுயமாக தொழில் செய்ய வேண்டும் என்கிற ஆர்வம், அதற்கு தாம் எடுத்த முதல் முடிவுகள், அதில் ஏற்பட்ட தோல்விகள் , அதன் மூலம் கிடைத்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

அவரின் தகவல்கள் தொழில் செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கு சரியான பாதை தேர்வு செய்ய வழிகாட்டுதல்களாக இருந்தன.

கேக் துறையில் கால் பதித்து சாதித்து வந்தாலும், உணவு உற்பத்தி செய்யும் இயந்திரங்களை தயாரித்து வருவதையும் தெரிவித்தார்.

அதில் உள்ள தொழில்நுட்பம், அதாவது, உணவு வீணவாதை தடுத்து, லாபத்தை அதிகரித்து தருவதோடு, தரமான உணவை குறைந்த கால விரயத்தில் கிடைக்கும்படி இவரது இயந்திரத் தயாரிப்பு தொழிநுட்ப சிறப்பம்சம் உள்ளது என்றார்.

இவர் ஒரே நேரத்தில் 30 ஆயிரம் இட்லி மற்றும் புரோட்டா தயாரிக்கும் இயந்திரங்களை உருவாக்கியுள்ளார்.

உணவுத்துறையில் ஈடுபட விரும்பும் இளைய தலைமுறையினருக்கு தாம் உதவுவதாகத் தெரவித்தார். உணவு விற்பனை செய்ய பல்வேறு உபாயங்களை தெரிவித்தது சிறப்பு.

இவரது உரைக்குப்பிறகு, சேம்பர் சார்பாக சிறப்பு விருந்தினருக்கு நினைவுப் பரிசு வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவம் செய்யப்பட்டார்.

நிறைவாக, பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



JC கணேசன் மருத்துவமனை
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho

Dr. J.C. GANESAN
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

Dr. MALARKODI GANESAN
MBBS., DGO, DNB(org)

சிறப்பு சிகிச்சை முறைகள்

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

இன்சூரன்ஸ் வசதி
மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மெண்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்

# சேம்பர் நிகழ்வுகள்




பள்ளி மாணவருக்கு பாராட்டு

கடந்த மே மாதம் வெளியான பத்தாம் வகுப்பு CBSE தேர்வு முடிவில், K.L.N. வித்யாலயா பள்ளியில் பயிலும் நம் சமூகத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன். K.G. தர்ஷன் குமார், 500க்கு 488 மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலாவதாகவும், மதுரை மாவட்ட அளவில் மூன்றாவதாகவும் வந்துள்ளார்.

சாதனைபடைத்த மாணவன் மற்றும் அவரது பெற்றோரை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் அழைத்து கௌரவம் செய்தது. இவரது தந்தை பிரபல புகைப்படக்கலைஞரும், ஸௌ. சேம்பர் உறுப்பினரும் ஆவார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் மேடையில் வாழ்த்தினார். பலர் பாராட்டினர்.

---



இதழ் வெளியீடு

லாப் ஸமாச்சார் மே மாத இதழ் சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினரும், வேல் மருத்துவமனை நிறுவனர், பிரபல மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவர் Dr. K.N. சுப்பிரமணியன் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில், சிறப்பு அழைப்பாளர் திரு. K.S.சிவக்குமார், திரு. லகுடுவா பாஸ்கர், செயற்குழு உறுப்பினர் திரு. T.M. ருபேஷ் பாபு, துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன், தலைவர் திரு. K.K. தினேஷ், முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன், திருமதி. ரூபினி சுப்ரமணியன், திரு. K.K. ராம்குமார், திரு. K.K. சங்கர், பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி மற்றும் இணைச் செயலாளர் திரு. S.G. ஸ்ரீநிவாசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

---




சாதனையாளருக்கு விருது

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் முன்னாள் தலைவரும், லாப் ஸமாச்சார் இதழின் மூத்த ஆசிரியர்/வெளியீட்டாளர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்களுக்கு, சென்ற மாதம், நூறாண்டுகால பழமையான பொறியியல் அமைப்பான The Institution of Engineers(India) சார்பாக சிறந்த பொறியாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். பொறியியல் துறையில் பன்முக சாதனை படைத்தவர்களுக்கு இந்த விருதை நம் சமூகத்தில் வெகு சிலரே பெற்றுள்ளனர். இந்நிலையில், நமது சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் கிடைத்த விருது நம் சமூகத்திற்கும், சேம்பருக்கும் பெருமை சேர்த்துள்ளது. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் குழுவினர் பலர் நிகழ்வில் பங்கேற்றுப் பாராட்டினர்.




SCC Trade Fair 2025

# சேர்மன் செய்தி



K.K. குபேந்திரன்

அனைவருக்கும் வணக்கம்,

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கி 18 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. பல்வேறு தொழில் நிகழ்ச்சிகள், பயிற்சி பட்டறைகள், மாநாடு, தொழில் வர்த்தக கண்காட்சி, தொழில் மற்றும் வேலை வாய்ப்புகள், சமூகப்பணிகளை பல செய்து ஒரு மிகப்பெரிய அமைப்பாக சமூகத்தில் வளர்ந்துள்ளது.

கடந்த 2011 முதல் சிட்கான் என்கிற மாநாட்டுடன் தொழில் வர்த்தக கண்காட்சியை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தி வருகிறது என்றாலும், 2008 முதலே, நமது சேம்பர் தொழில் வர்த்தக கண்காட்சியை சமூக நலப்பேரவையின் "திவளி தின்னாள்" நிகழ்ச்சியுடன் இணைந்து நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம், நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தில் பல்வேறு தொழில் துறைகளில் உள்ளவர்களின் தயாரிப்புகளை நம் சமூக மக்கள் பலருக்கு அறியச் செய்திட முதல் முயற்சியாக செய்து இன்றளவும் அதை வெற்றிகரமாக நடத்தி வருவது நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்தும் தொழில் வர்த்தக கண்காட்சி என்றால் நமது சமூகத்தில் ஒரு தனி அங்கீகாரம் நம் மக்களிடத்தில் உள்ளதை கண்கூட காண முடிகிறது.

பொது மக்கள் தந்த அங்கீகாரத்தின் அடிப்படையில், தொழில் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் இணைந்து நடத்துவதை தவிர்த்து, தொழில் வர்த்தக கண்காட்சியை மட்டும் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தலாம் என கடந்த 2023ம் ஆண்டு நிர்வாகத்தால் முடிவு செய்யப்பட்டது. இது முன்னாள் தலைவர்களின் எதிர்பார்ப்பும் ஆகும். அதன்படி, **SCC Trade Fair** 2023 என்கிற தலைப்பில் முதல் வர்த்தக கண்காட்சி மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள வி.எஸ். செல்லம் சரஸ்வதி அரங்கில் நடைபெற்றது. இதற்கு கிடைத்த ஸ்டால் பங்களிப்பாளர்களின் மற்றும் பொது மக்களின் வருகை மிகுந்த வரவேற்பை தந்தது.

இதனடிப்படையில், நிகழும் 2025ம் ஆண்டிலும் நடத்த நிர்வாகத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் இந்த மாபெரும் வர்த்தக கண்காட்சிக்கு தங்களின் தொடர் ஆதரவு இந்த முறையும் இருக்கும் என்று நம்புகிறோம்.

சேம்பர் முன்னாள் தலைவர்கள் மற்றும் SCC Trade Fair 2023ன் தலைவராக இருந்த, தலைவர் திரு. K.K. தினேஷ் ஆகியோரின் வழிகாட்டுதலில், நடைபெற இருக்கும் **SCC Trade Fair** 2025 தொழில் வர்த்தக கண்காட்சிக்கு தலைமை பொறுப்பை துணைத் தலைவராக இருக்கும் K.K. குபேந்திரன் ஆகிய நான், செயற்குழுவின் ஒப்புதலுடன் தலைமைப் பொறுப்பேற்றுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடன் இணைந்து பயணிக்க, செயற்குழு உறுப்பினர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் ஒருங்கிணைப்பாளராகவும், அவருடன் சிறப்பு அழைப்பாளர்கள் திரு. T.R. சரவணன், திரு. S.R. சுந்தர்நாத், திரு. S.S. பிரேம்குமார் மற்றும் திரு. V.S. விஷ்ணுவர்தன் ஆகியோர் செயலாற்ற உள்ளனர்.




ஜூன் 5ம் தேதி நடைபெற்ற சேம்பர்-ன் மாதாந்திர கூட்டத்தில் உடனடி முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களின் கரங்களால், **SCC Trade Fair** 2025 பிரவுச்சர் வெளியீடு செய்யப்பட்டது. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ப்ளாக் ஃபாரஸ்ட் திரு. பி.ஆனந்த் சேம்பர் அவர்கள் முதல் பிரவுச்சரை பெற்றுக்கொண்டார்.

இந்த தொழில் வர்த்தக கண்காட்சி வரும் ஆகஸ்ட் 8,9 & 10 (வெள்ளி, சனி & ஞாயிறு) ஆகிய மூன்று தினங்களுக்கு, மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள ராஜ்பாலா அரங்கில் நடைபெற இருக்கிறது.

சேம்பர் அங்கத்தனிர்கள், பொதுமக்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சமூக தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேன்மை பெறச் செய்யவும் அழைக்கிறோம்.

Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com


# SCC Trade Fair 2025

II Edition

**Date :**
**Aug. 8,9 & 10 - 2025**
Friday, Saturday & Sunday

**Place :**
## Rajbala Hall A/c
**Kamarajar Salai, Madurai.**

## Stall Layout




Booking before 30th Jun.'25
*Early bird*
**Offer**
**Rs.3000/-**

### STALL - TARIFF

| Rs. 15000/- | Rs. 25000/- |
|---|---|
| Regular Stalls | Stage-Premium Stalls<br>Prime Stalls |

**Size: 2m x 2m**

### Available Amenities

| Table - 1 | Chair - 2 |
|---|---|
| Plug Point & Tube Light | |

### For Stall Booking
**93441 97952**
**98940 37794**
**95000 35200**

*Stall holders are allowed to fix the flex only in their stall area, other than will be charged.

SCAN & PAY

**Bank Details for Payment**
*All Payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
State Bank of India,
Branch : SME Branch
A/c No. : **30134805614** IFSC : **SBIN0011544**

| | | |
|---|---|---|
| **K.K. DINESH**<br>President | **T.R. MOHANRAM**<br>Imm. Pt. President | **A.B. KUMARESH BABU**<br>General Secretary |
| **V.V. RAMLAKSHMANJI**<br>Treasurer | **S.G. SRINIVASAN**<br>Jt. Secretary | **T.N. SURIYAPRAKASH**<br>Jt. Secretary |

**SCC Trade Fair 2025 - TEAM**
**K.K. KUBENDRAN,** *Chairman, Vice President*
**T.M. RUBESH BABU,** *Co-ordinator*

*Committee Members :*
**T.R. Saravanan**
**S.R. Sundarnath**
**S.S. Prem Kumar**
**V.S. Vishnuvardhan**

*Organised by*
SOURASHTRA CHAMBER OF COMMERCE
MADURAI

# அதிக வட்டி தரும் நிதி ஆபத்து இல்லாத வங்கிகள்

பெரிய வணிக வங்கிகள் வழங்கும் அசல் தொகைக்கான வட்டி விகிதங்களை விட அதிகமாக வட்டி ஈட்ட விரும்புவோருக்கு சரியான தேர்வு சிறு நிதி வங்கிகளே. அவ்வங்கிகளின் வட்டி விகிதங்கள் மற்றும் அவற்றின் கால அளவுகள் குறித்த விரிவான அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வங்கியின் பெயர் | அதிகபட்ச வட்டி விகிதம் | அதிகபட்ச கால அளவு | 1 வருட கால அளவு (%) | 3 வருட கால அளவு (%) | 5 வருட கால அளவு (%) |
|---|---|---|---|---|---|
| AU Small Finance Bank | 7.75% | 18 மாதங்கள் | 7 | 7.5 | 7.25 |
| Equitas Small Finance Bank | 8.05% | 888 நாட்கள் | 7.9 | 7.75 | 7.25 |
| ESAF Small Finance Bank | 7.75% | 444 நாட்கள் | 5 | 6.25 | 6 |
| Jana Small Finance Bank | 8.20% | 5 ஆண்டுகள் | 7.5 | 8.05 | 8.2 |
| North East Small Finance Bank | 9.00% | 18 மாதங்கள் 1 நாள் முதல் 18 மாதங்கள் 2 நாட்கள் | 7 | 8.75 | 8 |
| Suryoday Small Finance Bank | 8.60% | 5 ஆண்டுகள் | 7.9 | 8.4 | 8.6 |
| Ujjivan Small Finance Bank | 8.05% | 18 மாதங்கள் | 7.9 | 7.2 | 7.2 |
| Unity Small Finance Bank | 8.60% | 1001 நாட்கள் | 7.25 | 8.15 | 8.15 |
| Utkarsh Small Finance Bank | 8.25% | 2 ஆண்டுகள் முதல் 3 ஆண்டுகள் வரை | 6.25 | 8.25 | 7.75 |

- தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (01.06.2025)

# மத்திய அரசு திட்டத்தின் ரிஸ்க் இல்லாத முதலீடு

தேசிய சேமிப்பு சான்றிதழ் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு அதிபட்ச வரம்பு எதுவும் இல்லை. இருப்பினும், பழைய வரி முறையின் கீழ் ரூ. 1.5 லட்சம் வரையிலான முதலீடுகளுக்கு மட்டுமே வரிச் சலுகை கிடைக்கும்.

தேசிய சேமிப்பு சான்றிதழ் National Savings Certificate (NSC) என்பது இந்திய அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் ஒரு சேமிப்புத் திட்டமாகும். இது நிலையான வருமானத்தை வழங்குகிறது. அதிக ரிஸ்க் எடுக்க விரும்பாத, சிறு முதலீட்டாளர்களுக்கு இந்தத் திட்டம் மிகவும் ஏற்றது. இது 1989 மே மாதம் தொடங்கப்பட்டது.

தேசிய சேமிப்பு சான்றிதழ் கணக்கை குறைந்தபட்சம் ரூ. 1000 டெபாசிட் செய்து எந்த அஞ்சல் அலுவலகத்திலும் திறக்கலாம். இந்தத் திட்டத்தின் முதிர்வு காலம் 5 ஆண்டுகள். ஒவ்வொரு காலாண்டிலும் வட்டி விகிதம் மதிப்பாய்வு செய்யப்படும். இந்த சேமிப்புத் திட்டம் தற்போது ஆண்டுக்கு 7.7% வட்டி வழங்குகிறது. தேசிய சேமிப்பு சான்றிதழ் முதலீட்டாளர்கள் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80சி-ன் கீழ் வரி சலுகைகளையும் பெறுகிறார்கள்.

தேசிய சேமிப்பு சான்றிதழ் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு அதிகபட்ச வரம்பு எதுவும் இல்லை. இருப்பினும், பழைய வரி முறையின் கீழ் ரூ. 1.5 லட்சம் வரையிலான முதலீடுகளுக்கு மட்டுமே வரிச்சலுகை கிடைக்கும். இதில் இருந்து பெறப்படும் வட்டிக்கு பிற வருமானங்கள் என்ற தலைப்பின் கீழ் வரி விதிக்கப்படும். ஒட்டுமொத்தமாக, தேசிய சேமிப்பு சான்றிதழ் என்பது முதலீடு மற்றும் வரி சேமிப்பு என்ற இரட்டை நன்மைகளைக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டு காலத்திற்கு ஆண்டுக்கு 7.7% கூட்டு வட்டி விகிதம் வழங்கப்படுகிறது. இதன் வட்டி ஆண்டுதோறும் கூட்டப்பட்டாலும், முதிர்வு நேரத்தில் மட்டுமே வழங்கப்படும். திட்டம் முதிர்ச்சியடைந்த பிறகு, அது தானாகவே புதுப்பிக்கப்படாது. 5 ஆண்டுகள் முடிந்த பிறகும் முதலீடு செய்ய விரும்பினால், சந்தாதாரர் தற்போதுள்ள வட்டி விகிதத்தில் புதிய தேசிய சேமிப்பு சான்றிதழை வாங்க வேண்டும். நீங்கள் எத்தனை சான்றிதழ்கள் வேண்டுமானாலும் வாங்கலாம்.

இந்தக் குறிப்பின்படி, உதாரணத்திற்கு ஒருவர் ரூ. 15 லட்சத்தை ஒருமுறை முதலீடு செய்தால் 5 ஆண்டுகளில் முதிர்வுதொகையாக ரூ. 21,73,551 கிடைக்கும். அதாவது வட்டியாக ரூ. 6,73,551 -ஐ ஈட்டலாம்.

உங்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யும்போது, ஒவ்வொரு ஆண்டும் இந்த திட்டத்தில் இருந்து பெறப்பட்ட வட்டி வருமானத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டும். மத்திய நேரடி வரிகள் வாரியம் CBDT ஆண்டுதோறும் திரட்டப்பட்ட வட்டியை தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

- தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (29.05.2025)

# தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின்

# 14 முக்கிய பொது அறிவிப்புகள்

(பிரிவு 26,31,32 உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006 r/w விதி 2.1.14(1), உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் (உணவு வணிக உரிமம் மற்றும் பதிவு) ஒழுங்குமுறைகள், 2011 & விதி 2.3.15(1)(b), உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் (விற்பனை மீதான தடை மற்றும் கட்டுப்பாடுகள்) ஒழுங்குமுறைகள், 2011-ன் கீழ் அறிவிக்கப்படுகின்றது.

- அனைத்து உணவு வணிகர்களும் https://foscos.fssai.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து, உணவு பாதுகாப்பு உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- அனைத்து உணவு வணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு டைஃபாய்டு மற்றும் மஞ்சள் காமாலை உள்ளிட்ட நோய்களுக்கு எதிராக தடுப்பூசி செலுத்தி, மருத்துவத் தகுதி சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- உணவு வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தண்ணீரை பகுப்பாய்வு செய்து, பகுப்பாய்வறிக்கை வைத்திருக்க வேண்டும்.
- உணவுப் பொருட்களை ஈக்கள் / பூச்சிகள் மொய்க்காத வண்ணம் கண்ணாடி பெட்டியில் மூடி வைத்து, காட்சிபடுத்த வேண்டும்.
- உணவு எண்ணெயை ஒருமுறை மட்டுமே சமைக்கப் பயன்படுத்த வேண்டும். மீதமான பயன்படுத்திய உணவு எண்ணெயை, FSSAI அங்கீகரித்த கொள்முதலாளருக்கு மட்டும் விற்க வேண்டும்.
- விற்பனையாகாமல் மீதமான உணவை நுகர்வோருக்கு வழங்காமல் அப்புறப்படுத்திடல் வேண்டும்.
- நியூஸ் பேப்பர் போன்ற அச்சிட்ட காகிதங்களில் உணவுப் பொருளில் நேரடியாகப்படும் வகையில் பரிமாறவோ / பொட்டலமிடவோ கூடாது.
- அனுமதிக்கப்படாத நெகிழியில் (பிளாஸ்டிக்) உணவுப் பொருட்களை சூடாகவோ அல்லது இயல்பு நிலையிலோ பொட்டலமிடக்கூடாது.
- உணவகங்களில் உணவு பரிமாற வாழை இலை அல்லது அனுமதிக்கப்பட்ட பார்ச்மெண்ட் பேப்பர் / அலுமினியம் ஃபாயில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அனுமதிக்கப்படாத நெகிழியினை (ப்ளாஸ்டிக்) பயன்படுத்தக்கூடாது.
- எவ்வகை உணவு எண்ணெய்களையும் லேபிள் விபரங்களின்றியும், பொட்டலமிடாமல் சில்லறை அடிப்படையிலும் (loose sale) நுகர்வோருக்கு விற்பனை செய்தல் கூடாது.
- உணவைக் கையாளுபவர்கள் கையுறை மற்றும் தலைமுடி கவசம் போன்றவற்றைத் தவறாமல் அணிய வேண்டும்.
- பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்களை கொள்முதல் / விற்பனை செய்யும்போது, FSSAI உரிமம் எண்ணுடன் கூடிய முழுமையான லேபிள் விபரங்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- உணவு சமைக்க மற்றும் நொறுக்குத் தீனிகள் தயாரிக்க அயோடின் கலக்காத உப்பு இருக்கக்கூடாது.
- சிக்கன்-65, பஜ்ஜி, கோபி-65 போன்ற உணவுப் பொருட்களில் செயற்கை நிறமிகள் சேர்க்கக்கூடாது.

உணவு வணிகர்கள் அனைவரும் இவ்வறிப்பைக் கண்ட 14 தினங்களுக்குள் மேற்கூறியவற்றை தவறாது பின்பற்றிட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்பின்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரங்கல்



V.S. தியானேஷ்

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் ஆயுட்கால உறுப்பினரும், பாபு & பாபு நிறுவனத்தாருமான திரு. **V.S. தியானேஷ்** அவர்கள் கடந்த 24.05.2025 அன்று காலாமானார் என்ற செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு சௌ. சேம்பர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா ஸ்ரீமந் நாராயணன் பாதத்தை தழுவ பிரார்த்திக்கிறோம்.

---

12.06.2025 அன்று நண்பகல் குஜராத் அகமதாபாத்-ல் இருந்து புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் வெடித்துச் சிதறி 241 பேர் உயிரிழந்த சம்பவம் நாட்டு மக்கள் அனைவரையும் உலுக்கியுள்ளது. பலர் தங்கள் கனவுகளுடன் பயணமான அந்த விமானம் திடீர் விபத்துக்குள்ளானது மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சிறுவர்கள், குழந்தைகளும் இறந்துள்ளது பரிதாபம். இந்த சம்பவத்தில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் இறந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் விமானம் மருத்துவக் கல்லூரி விடுதி மேல் விழுந்ததால் மாணவர்களின் உயிர், உடல், எதிர்கால வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது. இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறது.



# இந்த ஆண்டில் மட்டும் மூன்று முறை குறைக்கப்பட்ட ரெப்போ விகிதம்

ரெப்போ விகிதம் 5.50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. கடன் வாங்கியவர்களுக்கு மகிழ்ச்சி. டெபாசிட்தாரர்களுக்கு வருமானம் சற்று குறையும்.

இந்திய ரிசர்வ் வங்கியின் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட நாணயக் கொள்கைக் குழு MPC, ரெப்போ விகிதத்தை எதிர்பார்த்ததை விட அதிகமாக 50 அடிப்படைப் புள்ளிகள் குறைத்து 5.50 சதவீதமாக குறைத்துள்ளது. இது பிப்ரவரி 2025 முதல் தொடர்ந்து மூன்றாவது முறையாக குறைக்கப்பட்டுள்ளது. பண வீக்கம் 4 சதவீத இலக்கை விடக் குறைவாக இருப்பதால், வளர்ச்சி வாய்ப்புகளை அதிகரிப்பதே இந்த எம்.பி.சி. நடவடிக்கையின் நோக்கமாகும். இந்த வட்டி விகிதக் குறைப்பு கடன் வாங்குபவர்ளுக்கு, குறிப்பாக வீட்டுக் கடன்களுக்கு பயனளிக்கும். அதே நேரத்தில் வைப்பத்தொகையாளர்கள் மற்றும் சேமிப்பாளர்கள் வரும் மாதங்களில் வங்கி வைப்புகளில் குறைந்து வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

# வருமான வரி கால அவகாசம் நீட்டிப்பு

2024-25 நிதியாண்டுக்கான வருமான வரி தாக்கல் செய்வதற்கான கடைசி தேதியை வருமான வரித்துறை நீட்டித்துள்ளது. அதாவது, 2025ம் ஆண்டு ஜுலை 31ம் தேதிக்குள் வருமான கணக்கை தாக்கல் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இந்த கால அவகாசம் செப்டம்பர் 15ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# ரூ. 500/- வருமா? வராதா?

டிஜிட்டல் நாணயத்திற்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், நாட்டில் டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்த ரூ. 500 மற்றும் ரூ. 2000 நோட்டுக்களை செல்லாது என்று இந்திய ரிசர்வ் வங்கி எவ்வித அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது தான் உண்மை. ரிசர்வு வங்கி 100 & 200 ரூபாய் நோட்டுகளை அதிக அளவு ஏடிஎம்களில் இருக்க வேண்டும் என ஏற்கனவே வங்கிகளை வலியுறுத்தியுள்ளது. வரும் செப். 30க்குள் 75% ஏடிஎம்-களிலும், 2026 மார்ச் 31க்குள் 90% ஏடிஎம்களில் ரூ. 100 & 200 நோட்டுகளை வழங்குவதை வங்க ஏடிஎம்கள் உறுதி செய்ய வேண்டும் என வலியுருத்தியுள்ளது.

# தொழில் கடன்களுக்கு ஆய்வுக் கட்டணம் ரத்து

தமிழக சிறு,குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க, டிக் எனப்படும் தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கும் கடன்களுக்கான ஆய்வுக் கட்டணத்தை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.

தமிழகத்தில் தொழில் துவங்குவோர் நிலம் வாங்கவும், கட்டடம் கட்டவும், இயந்திரங்கள் வாங்கவும், மூலதன செலவுகளை மேற்கொள்ளவும், தமிழக அரசின் தொழில் முதலீட்டு கழகம் பல்வேறு பிரிவுகளில் கடன் வழங்குகிறது.

இந்நிறுவனம் வழங்கும் மொத்த கடன்களில், 90 சதவீதம் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆண்டுக்கு சராசரியாக, 1000 நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

சிறு,குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பொது கால கடன், திறந்த கால கடன் உள்ளிட்ட, டேர்ம் லோன்களுக்கு, ஆய்வு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது, கடன் தொகையை பொறுத்து, 5000 ரூபாய் முதல், 10 லட்சம் ரூபாய் வரை உள்ளது. இந்த கட்டணம், சிறு நிறுவனங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, சிறு,குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க, நடப்பு நிதியாண்டில் கடன்களுக்கான ஆய்வு கட்டணத்தை முழுவதுமாக தள்ளுபடி செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# புதிய விதிமுறைகளுடன் - ஏ/சி

இந்திய அரசு, ஏசி வெப்பநிலையை ஒழுங்குபடுத்த திட்டமிட்டுள்ளது. அதன்படி, புதிய ஏர் கண்டிஷனர்களுக்கான குறைந்தபட்ச வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸ் என நிர்ணயிக்க இருக்கிறது. இனி வரும் புதிய ஏசி-க்கள் 20 முதல் 28 டிகிரி செல்சியஸ் வரம்புகளை கொண்டிருக்கும் என்று மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வீடுகள், அலுவலகங்கள் மற்றும் கார்களில் தேவையற்ற ஆற்றல் நுகர்வைக் குறைக்கும் முயற்சியில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலையை மின் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

இனி வரும் புதிய ஏசி-க்களில் குறைந்த பட்சடம் 20டிகிரியும், அதிக பட்சம் 28 டிகிரி செல்சியஸ் காணப்படும்.




விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!
ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்
91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.
SINCE-1993 31 Years 01-07-1993 2023 SVLS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்
அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்
தினசரி & கட்டிங் மாத காலண்டர்
12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
தமிழ் டைரி ஆங்கில டைரி
30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜுட் பேக் & தாம்பூல பை
பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
விபூதி கவர் 7 DAYS DELIVERY
சாமி படம் வுட்லேமினேசன்
ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873, 98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com

# Barrier-coated Paper & Paper Board

## வரும் காலங்களில் தேவை அதிகரிக்கும்



தடுப்பு பூசப்பட்ட பேக்கேஜிங் காகிதம் மற்றும் காகிதப் பலகைக்கான தேவை (Barrier-coated Paper and Paper Board) அடுத்த பத்தாண்டுகளில் இரட்டை இலக்கங்களில் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் இது ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கிற்கு (Single-use Plastic) சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றாகும். மொத்த உள்நாட்டு காகிதச் சந்தையில் 23 மில்லியன் டன்களில், பேக்கேஜிங் காகிதம் மற்றும் பலகை 15 மில்லியன் டன்கள் என்று காகிதத் துறை தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

FMCG, மருந்து, மற்றும் உணவு மற்றும் பானங்கள் முழுவதும் முன்னணி பிராண்ட் உரிமையாளர்களிடமிருந்து ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கிலிருந்து காகிதப் பேக்கேஜிங்கிற்கு மாறுவதற்கு அதிக தேவை வருகிறது. இருப்பினும் பயனுள்ள தடுப்பு பூசு அவசியம் என்று இந்திய காகித உற்பத்தியாளர்கள் சங்கத்தின் IPMA தலைவர் பவன் அகர்வால் தெரிவிக்கிறார்.

தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமான மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான ஒரு மாற்று காகிதம். இது சுற்றுச்சுழலுக்கு உகந்ததாக இருப்பதோடு பல்துறை பண்புகளையும் ஒருங்கிணைக்கிறது. வேறு எந்த தயாரிப்பு போலல்லாமல், காகிதம் மக்கும் தன்மை கொண்டது. உயிரி-மக்கும் தன்மை கொண்டது மற்றும் 100 மறுசுழற்சி செய்யக்கூடியது.

தடுப்பு பூசப்பட்ட காகிதங்கள் மக்கும் தன்மை கொண்டவை மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடியவை போன்ற பாதுகாப்பான, செயல்பாட்டு மற்றும் நிலையான பேக்கேஜிங் தீர்வுகளை வழங்குகிறது. இத்தகைய நிலையான பொருட்களில் முதலீடு செய்வதன் மூலம், நமது சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைத்து, ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கு வழி வகுக்க முடியும். என்று IPPTA தலைவர் திரு. பவன் கைதன் கூறுகிறார்.

தடுப்பு பூசப்பட்ட காகிதங்களுக்கான சந்தை (Board and packaging உட்பட) 2030ம் ஆண்டுக்குள் உலகளவில் சுமார் 11 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இது இந்த நேரத்தில் கிட்டத்தட்ட 5 சதவீத CAGR வளர்ச்சியை குறிக்கிறது. இதிக மக்கள் தொகை மற்றும் ஆர்வமுள்ள இளம் மக்கள்தொகை கொண்ட ஒரு நாட்டைக் கருத்தில் கொண்டு, தடுப்பு பூசப்பட்ட பேக்கேஜிங்கிற்கான இந்த தேவையில் கிட்டத்தட்ட 10 சதவீதம் உணவு, பாணங்கள், மருந்துகள் மற்றும் மின் வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் இந்தியாவிலிருந்து வரும்.

## மைக்ரோ பிளாஸ்டிக் - நானோ பிளாஸ்டிக்

வழக்கமான பிளாஸ்டிக் சிதைவதில்லை. அவை மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் மற்றும் நானோ பிளாஸ்டிக்ஸ் போன்ற சிறிய துகள்களாக உடைந்து, நமது சுற்றுச்சூழலை மாசுபடுத்தி, காற்று, நீர் மற்றும் உணவு மூலம் நம் உடலில் நுழைகிறது.

மைக்ரோ பிளாஸ்டிக் என்பது 5 மிமீ.,க்கு குறைவான நீளமுள்ள பிளாஸ்டிக் துண்டு. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பாட்டில்கள், உணவு பொட்டலங்கள் மற்றும் பிளாஸ்டிக் துகள்கள் போன்ற நுகர்வோர் பொருட்களின் அப்புறப்படுத்தல் மற்றும் சிதைவிலிருந்து பிறப்பது. பேக்கேஜிங் செய்யப் பயன்படுத்தப்படும் சிறிய பிளாஸ்டிக் துண்டுகள், ஆட்டோ பாகங்கள், பொம்மைகள் மற்றும் பிற பொருட்களுக்கு பயன்படுத்தப்படுபவை.

நானோ பிளாஸ்டிக் ஒரு மைக்ரோ மீட்டரை விட (ஆயிரம் நானோமீட்டர்கள்) சிறிய பிளாஸ்டிக் துகள்கள். அவை பெரிய பிளாஸ்டிகள் பொருட்களின் சிதைவு அல்லது துண்டு துண்டாக வேண்டுமென்றே தயாரிக்கப்பட்டவை அல்லது தற்செயலாக உற்பத்தி செய்யப்பட்டவை.

இந்த மைக்ரோ பிளாஸ்டிக்குகள் மனித ஆரோக்கியத்திற்கும், வனவிலங்குகளுக்கும் பெரும் ஆபத்தாக இருந்து வருகின்றன. உலகின் ஒவ்வொரு மூலையிலும், காற்றிலும், தண்ணீரிலும், உணவிலும் ஊடுருவி வருகிறது. பிளாஸ்டிக் மாசுபாடு ஒரு பெரிய கவலையாக இருந்தாலும், இன்றைய சுற்றுச்சூழல் சவால்களில் மிகவும் சரிசெய்யக்கூடிய ஒன்றாக உள்ளது. எனினும், மைக்ரோபிளாஸ்டிக்குகளின் கட்டுப்பாடு கைமீறிப் போவதற்கு முன்பு, அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் இந்த வளர்ந்து வரும் சவாலுக்கு தீர்வுகளைக் காண தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நேரம் இது.

2025ம் ஆண்டின் இறுதிக்குள், உலகம் 516 மில்லியன் டன் பிளாஸ்க்கை உட்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் அனைத்து பிளாஸ்டிக்குகளிலும் 9% மட்டுமே உலகளவில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன.

– நாசா விஞ்ஞானி, ஜனார்தன் நஞ்சுண்டன்



# இ-இன்வாய்ஸ்

## காலதாமத்தின் விளைவுகள்

ஏப்ரல்-1 முதல் இ-இன்வாய்ஸ் பெற்ற 30 நாட்களுக்குள், நிறுவனங்கள் அதை இன்வாய்ஸ் ரெஜிஸ்டிரேஷன் போர்ட்டலில் பதிவேற்றம் செய்யாவிட்டால், உள்ளீட்டு வரிப்பயனை பெற இயலாது.

இதுவரை, ஆண்டுக்கு 100 கோட ரூபாய்க்கு கூடுதலான வர்த்தகம் கொண்ட நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த விதி பொருந்திய நிலையில், கடந்த ஏப்ரல் முதல் 10 கோடி ரூபாய்க்கு கூடுதலாக வர்த்தகம் செய்யும் நிறுவனங்களும் இந்த விதியை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சிறு நிறுவனங்களும் இதை பின்பற்றியாக வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளன.

காலதாமதம் ஏற்பட்டால் என்ன விளைவுகள் ஏற்படும்?

- தாமதமாக பதிவேற்றினால், இன்வாய்ஸ் ரெஜிஸ்டிரேஷன் போர்ட்டல் அதை ஏற்றுக்கொள்ளாது; நிராகரித்துவிடும்.
- இதனால் பொருட்களை வாங்கும் நிறுவனங்கள், உள்ளீட்டு வரிப் பயனை பெற இயலாது.
- ரீஃபண்டு பெறுவதில் சிக்கல் ஏற்படும்.
- விற்பனையாளர்கள் வரி செலுத்துவது பாதிக்கப்படும்.

# மருத்துவத் தகவல்

கேள்வி: என் வயது 52. ஆசிரியராக பணிபுரிகிறேன். 6 மாதங்களாக தோள்பட்டை வலியால் அவதிப்படுகிறேன். கறுப்பு பலகையில் கை உயர்த்த முடிவதில்லை. மருத்துவர் எனக்கு Shoulder Impingement உள்ளது என்றார். தற்போது 2 வாரங்களுக்கு முன் தோள்மூட்டு நுண்துறை சிகிச்சை (Shoulder Arthroscopy) செய்து கொண்டேன் வலி இல்லை. மூட்டின் அசைவுகள் நன்றாக இருக்கிறது. வேலைக்கு சென்று கறுப்பு பலகையில் எழுத ஆரம்பித்தால் வலி வரும் வாய்ப்பு உண்டா?

பதில்: Impingement Syndrome-க்காக செய்யப்படும் மூட்டு நுண்துளை சிகிச்சையில் தோள்மூட்டில் உள்ள Subracromial Bursa என்னும் நீர்சுரப்பியில் புண் இருப்பதால் அது அகற்றப்படுகிறது. மேலும் Impingement Syndrome ஆகாமல் இருப்பதற்கு Minimal Acromioplasty செய்யப்படுகிறது. இவ்வாறு முறையாக செய்தால் தோள் மூட்டின் வலி நீங்கும். மற்றும் ஆறு முதல் பத்து வாரங்களில் கறுப்பு பலகையில் எழுதுவது உள்பட அனைத்து வேலைகளும் வலியின்றி செய்ய முடியும்.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை &
வேல் சிறப்பு எழும்பியல் மையம்


APPOLO SALES & SERVICE
அப்போலோ மோட்டார் & பம்ப்ஸ்
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை, கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்

கம்பரசர் மோட்டார் ரூ 12,500 முதல்
மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்
ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்
சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்


தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்


நூற்றாண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145, East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center, COLUMBUS, OHIO, 43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

100 YEARS SRB

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300


KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*With best compliments from*

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for



**K.K.Dinakaran**
Chairman & Director

Godrej – Chemical Division

IFF – Perfumes & Fragranaces

INDORAMA – Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals &
Consumer Products

Micro Sol – Perfect Cleaning for Future Life



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products









Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

| Branches | Chennai | Madurai | Hyderabad | Bangalore |
|---|---|---|---|---|

# கோபமான வாடிக்கையாளரை எவ்வாறு கையாள்வது?

ஒரு கோபமான வாடிக்கையாளர் உங்கள் தயாரிப்பு, சேவை அல்லது நிறுவனத்தில் எதிர்மறையான அனுபவத்தைப் பெற்றிருக்கலாம். அந்த உறவு சேதமடைந்திருக்கலாம். மேலும் அதை சரிசெய்ய இழந்த வாடிக்கைாயளர் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்ட நீங்கள் பாடுபட வேண்டும்.

விரக்தியடைந்த வாடிக்கையாளர் ஒருவரை அணுகும்போது, சூழ்நிலையைத் தணிப்பது முக்கியம். கோபமான வாடிக்கையாளருக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதை அறிவது, வலுவான வாடிக்கையாளர் உறவுகளையும் வாடிக்கையாளர் விசுவாசத்தையும் உருவாக்கவதற்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதற்கு முதல் படியாகும்.

ஒரு கோபமான வாடிக்கையாளர் தனது விரக்தியை உங்களிடம் வெளிப்படுத்தும்போது, அதை தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்வது முற்றிலும் இயல்பானது. உங்கள் உள்ளுணர்வு உங்களை தற்காப்புடன் இருக்கச் சொல்லக்கூடும். குறிப்பாக வாடிக்கையாளர் தவறு என்று உங்களுக்குத் தெரிந்தால். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் வாடிக்கையாளர் ஆதரவை நாடுகிறீர்கள். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் பதட்டங்களைத் தணிக்கவும் நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்.

எதிர்வினையாற்றுவதற்கு முன், நீங்கள் நிதானமாக பதலிளிக்கும் வகையில் சூழ்நிலையைச் செயல்படுத்த சிறிது நேரம் ஒதுக்குங்கள்.

அமைதியாக இருந்து அமைதியான குரலில் பேசுங்கள். இது மிகவும் கோபமான வாடிக்கையாளர்களைக் கூட நிராயுதபாணியாக்க உதவும். மேலும் நிலைமையை மேலும் தணிக்கும் வாய்ப்புகளை அதிகரிக்கும்.

ஒரு வாடிக்கையாளர் கோபமாக இருக்கிறார். அவர் தனது குறையை நம்மிடம் அவரது பாணியில் வெளிக்காட்டலாம். அவர்கள் சொல்வதை முழுமையாக கேளுங்கள். உங்கள் வாடிக்கையாளர் எதை எதிர்பார்க்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

வாடிக்கையாளர் கூறுவதை நாம் கவனத்தில் கொள்கிறோம் என்பதை அவருக்கு உணர்த்த வாய்மொழியாக நான் பார்க்கிறேன், நிச்சயமாக போன்ற சொற்களை பயன்படுத்துங்கள்.

அவரைச் சமாதானப்படுத்தும்போது வாடிக்கையாளரின் பெயரைச் சொல்லி அழைப்பது மன அழுத்தத்தைக் குறைக்கும் போது சக்தவாய்ந்ததாக இருக்கும். இது ஒரு மனித தொடர்பை உருவாக்கும்.

பிரச்சனையைத் தீர்ப்பதில் நேரடியாகக் குதிப்பதற்குப் பதிலாக, உங்கள் வாடிக்கையாளர் எப்படி உணருகிறார் என்பதைச் சரிபார்க்க ஒரு கணம் செலவிடுங்கள். வாடிக்கையாளர் பச்சாதாபத்தை வளர்க்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவும்.

உங்கள் குழு தவறு செய்திருந்தால், அவர்களின் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பது குறித்து வெளிப்படையாக இருங்கள். அந்தச் சூழல், அவர்கள் கோபமாக இருக்கும் வாடிக்கையாளர் சேவை பிரதிநிதி உட்பட அனைவரும் தங்களால் முடிந்ததைச் செய்ய முயற்சிக்கிறார்கள் என்பதை உங்கள் வாடிக்கையாளருக்குப் புரிந்துகொள்ள உதவுகிறது.

கோபமான வாடிக்கையாளருடனான உரையாடலின் போது எதிர்மறையான சொற்களைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. அதற்கு பதிலாக, நேர்மறையான வார்த்தைகளைப் பயனபடுத்தி உரையாடலை உயர்த்தி திருப்திகரமான தீர்வை நோக்கி வழிநடத்தலாம். உதாரணத்திற்கு, சரி செய்ய முயற்சிக்கிறோம். உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?, உங்கள் வலியை புரிந்துகொள்கிறோம் போன்ற வார்த்தைகளை பிரயோகிக்கலாம்.

உங்கள் வாடிக்கையாளர் உங்களிடம் சொன்னதை மீண்டும் கூறிய பிறகு, நீங்கள் அதைச் சரியாகச் சொன்னீர்கள் என்பதை உறுதிபடுத்தச் சொல்லுங்கள். ஒரு எளிய ஒப்பந்தம் பதற்றத்தைத் தணித்து, உங்கள் இருவரையும் மிகவும் வசதியான இடத்தில் வைப்பதற்கு நீண்ட தூரம் செல்லும்.

நடந்த தவறுக்கு பொறுப்பை ஏற்றுக்கொள்வது, நேர்மயைாகவும் வெளிப்படையாகவும் இருக்க முயற்சிப்பது இழந்த வாடிக்கையாளரை மீட்டெடுக்க உதவும்.

நடந்த பிரச்சனையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக கோபமடைந்த வாடிக்கையாளருக்கு நன்றி தெரிவியுங்கள்.



# பாரதத்தின் பெருமையை பறைசாற்றும் சர்வதேச யோகா தினம்



உலகமயமாக்கல் என்ற பொருளாதார தாக்கத்தால் மக்கள் அனைவரும் மாக்கள் ஆகிவந்த சூழ்நிலையில், ஆன்மிக சிந்தனையுடன், ஐ.நா.சபையால், பெருமையுடன் பிரகடனப்படுத்தப்பட்டது சர்வதேச யோகா தினம். இதனை இந்தியமயமாக்கல் எனும் சித்தாந்தத்தின் அரிச்சுவடி எனலாம்.

2014ம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு ஜூன் 21-ந் தேதியன்றும் வெகு விமரிசையாக யோகா தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

உடல், மனம், உயிர் இவற்றை ஒரே நேர்கோட்டில் நிலை நிறுத்தும் ஆத்மார்த்த பயிற்சிதான் யோகா எனப்படுகிறது. ஔவையார் கூறியபடி, "ங"-ப்போல் உடம்பு வளையவும், குரங்கு போன்று அலைபாயும் மனதினை ஒருகட்டுக்குள் அணை போடவும், இவற்றிற்கு அடிப்படையாக இருக்கும் உயிரை, துடிப்புடன் உலாவரச் செய்வதுமாகிய முப்பெரும் பணிகளை செவ்வனே செய்யும் செயலே யோகா ஆகும்.

ஆரம்பநிலையில் யோகா-வை கலை எனக் கொண்டாலும், தொடர்ந்து அதில் ஈடுபாட்டுடன் இருந்தால், அதனை அறிவியல் என்றும் அறியலாம்.

21ம் நூற்றாண்டின் நவீன கண்டுபிடிப்புகளான சிலபல உடற்பயிற்சிகளினால் பக்கவிளைவுகள் ஏற்பட்டு, உயிரிழந்தவர்கள் ஏராளம். அதேபோல, மனம் சார்ந்த பிரச்சனைகளுக்கு இன்றைய மருத்துவம், நோயாளிகளை தூக்கமாத்திரைகளுக்கு அடிமைப்படுத்துவதைத்தவிர, குணமடையும் வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதே நிதர்சனம்.

எந்த வயதினரும், தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு யோகா பயிற்சியை கற்று வந்தால், உடலிலும் மனத்திலும் மாற்றங்களை உணரலாம். பக்கவிளைவுகள் இல்லாத ஆனந்தப் "பண்"பாடும் மேன்மையான நிலையை அடையலாம். இதுவே காலங்காலமாக நம் முன்னோர்கள் பின்பற்றி வந்த பண்பாடும் ஆகும்.

ஜூன் 21 அன்று மட்டும், பகல் நீண்டு காணப்படும். யோகா செய்பவர்களுக்கு, ஆயுள் நீடித்து வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பதைத்தான் இது குறிக்கிறதோ!

பாரதியார், "விசையுறு பந்தினைப்போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடலை" சிவசக்தியிடம் கேட்டார். தவறாமல் யோகா செய்து வருபவர்களுக்கு, அப்படி ஒரு வரம், தப்பாமல் கிடைக்கும்.

யோகா தினம் என்பதன் தொடர்ச்சியாக, டிசம்பர் 21ந் தேதி, உலக தியான தினம் என்றும், சென்ற வருடம் (2024) அறிவிக்கப் பட்டுவிட்டது. இதனை, உலகம், இந்தியமயமாக்கலின் இரண்டாம் கட்டம் என்றும் கொள்ளலாம்.

தற்போதைய அவசரயுகத்தில் யாருக்குமே காலநேரம் போதவில்லை. உண்பது, உறங்குவது போன்ற அன்றாட தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய பலரால் முடிவதில்லை. இவர்களுக்கு ஒரே புகலிடம் யோகா தான். 20 நிமிடம் தியானத்தில் இருந்தால், இரண்டு மணி நேரம் உறங்கியதற்கு சமம். நேரம் மிச்சமாவதுடன் உடல், மனம் புத்துணர்ச்சி பெறுவது என்பதே பேறு.

யோகா மற்றும் தியானத்தை கடைப்பிடிப்பவர்களுக்கு தேக ஆரோக்கியம் மட்டுமல்ல மன ஆற்றலும் சிறந்து விளங்கும். எண்ணங்களின் எண்ணிக்கை கட்டுப்படும். சொல்வாக்கு, செல்வாக்கு பெரும். செயல்திறன் உச்சத்தை அடையும்.

தனிமனிதனின் தரம் உயரும் பட்சத்தில், நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றமும் விண்ணைத் தொடும். அடுத்த சில ஆண்டுகளில், நம் நாடு வல்லரசு என ஆகப் போவதை இன்றே மனக்கண்ணால் தரிசிக்க முடிகிறதே!!!

வாழ்க பாரதம்...

*– வீரஜா*




# சமூக நிகழ்வுகள் சில...




மதுரை ஸ்ரீ நிவாசப் பெருமாள் கோவில் – ஸௌராஷ்ட்ர ப்ராமண தர்ம பிரபாலன டிரஸ்ட்–க்கு நம் சமூக முன்னோடி தொழில் நிறுவனமான குவாலிட்டி நிட் வியர்ஸ் பி.லிட்., சார்பாக தங்கக் குதிரை வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மகத்தான சேவையை பாராட்டி நிறுவனத்தார் திரு. குமரன் B. ஜகுவா மற்றும் திரு. K.R. ஸ்ரீதரன் ஆகியோரை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது.




உலக சுற்றுப்புற சூழல் தினத்தை முன்னிட்டு பந்தடி, மஹால் பகுதிகளில் 15 மரக்கன்றுகள் பசுமை இயக்கம் மற்றும் பந்தடி மஹால் மக்கள் நலவாழ்வு சங்கத்தின் சார்பில் நடப்பட்டன. பசுமை இயக்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் குறைந்தது 200 மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்ற என்பது குறிப்பிடத்தக்கது. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், இந்த சமூகத் தொண்டாற்றிய குழுவினரை வாழ்த்துகிறது.




ஜெனீவாவில் உள்ள சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த சர்வதேச தொழிலாளர்களுக்கான மாநாட்டில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் முன்னாள் தலைவரும், குட்டுவா சிலிகேட்ஸ் நிறுவனத்தாருமான திரு. K.K.G. பிரபாகரன் அவர்களை இந்திய நாட்டின் பிரதிநிதியாக தேர்வு செய்து மாநாட்டில் பங்கேற்கச் செய்திருந்தது.

இந்த மாநாட்டில், தொழிலாளர் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவ்யாவுடன், முக்கிய தொழிலதிபர்கள், இந்திய தொழிலாளர் கூட்டமைப்பினர் பங்கேற்றுள்ளனர். நம் நாட்டின் தொழிலாளர்கள் நலன் மற்றும் சட்டங்கள் குறித்து பேசப்பட்டது. இந்த மாபெரும் சர்வதேச மாநாட்டில் திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் பங்கேற்றது, நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–க்கும், நம் சமூகத்திற்கும் பெருமையான சேர்த்துள்ளது.

மாநாட்டில், தொழிலாளர் சட்டம் பற்றி பேசுவதற்கு குறிப்புகளை தந்து உதவிய சேம்பர் தொழிலாளர் சட்ட வழக்கறிஞரும், ஆலோசகருமான திரு. L.V. ஜோதிபிரகாஷ் ஆவர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.







Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்

**JSW Steel**





# ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**



நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*







# மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



# VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards



**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.06.2025 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2025 - 2027
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

UG CHEMI JAGSAN

U G கெமி ஜாக்சன்

(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com

வேல் மருத்துவமனை

வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement


VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com